STC 135/2020, 30.05.2022

**ம.சா.1 சின்னராமன் (குறுக்கு விசாரணை)**

நான் தோல்தூக்கி கிராமத்தில் வசித்து வருகிறேன். எதிரி கலைச்செல்வி திருச்சங்கோடு வட்டம், தோக்கச்சாவடி ஊரைச்சேர்ந்தவர். அவர் எனக்கு எப்படி பழக்கம் என்றால் என் மகளை அந்த ஊரில் திருமணம் முடித்த வகையில் எனக்கு அவர் பழக்கம். எதிரி கலைச்செல்வியின் கணவர் பெயர் எனக்கு தெரியாது. எதிரி கலைச்செல்வியின் கணவர் எனக்கு பழக்கம் இல்லை. தோல்தூக்கி கிராமத்திற்கு வந்து எதிரி என்னிடம் பணம் கேட்டார். எதிரி என்னிடம் பணம்கேட்டபோது எதிரி மட்டும்தான் வந்தார். வேறு யாரும் வரவில்லை. 06.05.2019 ம் தேதி எதிரி என்னிடம் பணம் கேட்டார். நான் எதிரிக்கு ஒரு மாதம் கழித்து பணம் கொடுப்பதாக சொன்னேன். 06.11.2019 ம் தேதி நான் எதிரிக்கு பணம் கொடுத்தேன். நான் எதிரிக்கு பணம் கொடுத்தபோது எதிரி மற்றும் எனது மருமகன் சுரேஷ் ஆகியோர் உடன் இருந்தார்கள். நான் எதிரிக்கு ரூ 5,00,000/-ம் பணம் கொடுத்தேன். ரூ. 5,00,000/-ம் என்பது பெரிய தொகை என்றால் சரிதான். மேற்படி தொகையை கணவர் பெயர்கூட தெரியாத நபரிடம் எதன் அடிப்படையில் கொடுத்தேன் என்றால் எதிரி என் மருமகனுக்கு உறவினர் என்ற முறையில் என் மருமகன் சொன்ன காரணத்தினால் நான் எதிரிக்கு பணம் கொடுத்தேன். புகாரில் என் மருமகன் சொல்லி பணம் கொடுத்தேன் என்று குறிப்பிட்டு செல்லியுள்ளேனா என்றால் இல்லை. (எதிரி தரப்பு வழக்கறிஞரின் கோரிக்கையின்பேரில் குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**